### ரோந்து கப்பலால் இடித்ததில் பலி

# மீனவர் உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய வழக்கு

## தாசில்தார் அறிக்கையளிக்க உத்தரவு

மதுரை, நவ. 16-
ரோந்து கப்பலால் இடித்ததில் படகு மூழ்கி மீனவர் பலியான விவகாரத்தில், உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய கோரிய வழக்கில் தாசில்தார் அறிக்கையளிக்க வேண்டுமென ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தை சேர்ந்த பிருந்தா, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

என் கணவர் ராஜ்கிரண் மற்றும் சுகந்தன், சேவியர் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்குதளத்தில் இருந்து கடந்த அக். 18ல் மீன் பிடிக்க சென்றனர். அக். 19ல் நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் ரோந்துக்கப்பல் மூலம் மீனவர்களின் படகை இடித்து தள்ளியுள்ளனர்.

இதில், இந்திய மீனவர்களின் படகு பழுதாகி நடுக்கடலில் மூழ்கியது. படகில் இருந்த மீனவர்கள் சுகந்தன் மற்றும் சேவியரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். 2 நாட்களுக்கு பிறகு, எனது கணவர் ராஜ்கிரண் சடலமாக மீட்கப்பட்டார். பின்னர், அவரது உடலை இலங்கை கடற்படையினர், இந்திய கடற்படையிடம் ஒப்படைத்தனர். என் கணவரின் உடலையாரிடமும் திறந்து காட்டாமல் அடக்கம் செய்தனர். என் கணவர் இலங்கை கடற்படையால் சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. போட்டோவில் அவர் முகம் மற்றும் உடலில் காயங்கள் இருந்தன. இந்த சம்பவம் குறித்து தமிழக போலீசார் சந்தேக மரணமாக வழக்குப்பதிவு செய்யவும், ராஜ்கிரண் உடலைதடயவியல் நிபுணர்களைக் கொண்டு மறு பிரேத பரிசோதனை செய்யவும், அவர் எப்படி இறந்தார் என்பதை கண்டறியும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், சம்பவம் குறித்து கோட்டைப்பட்டினம் தாசில்தார் தரப்பில் அறிக்கையளிக்க வேண்டுமென உத்தரவிட்டு விசாரணையை நாளைக்கு (நவ. 17) தள்ளி வைத்தார்.

தமிழ் முரசு
Tue, 16 November 2021
tm.dinakaran.com/c/64376396